R 4759 (page 45)

# நமது இருதயத்தை கவனித்தல்

## TAKING HEED TO OUR HEARTS

"சகலவிதமான கசப்பும். கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது." - எபேசியர் 4:31

இந்த துர்குணங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கிறதாகத் தெரிகிறது. பொதுவாக இது ஒன்றையொன்று பிறப்பிக்கிறது என்று அனுமானிக்கப்படுகிறது. அப்போஸ்தலர் ஒரு இடத்தில் கசப்பின் வேரை எழும்பப்பண்ணுகிற ஆபத்து இருக்கிறது என்றும் அதன்மூலம் அநேகர் களங்கம் அடைகிறார்கள் என்றும் கூறுகிறார். இந்த மாதிரி காரியங்களால் இப்படிப்பட்ட கசப்பின் வேரிலிருந்து எப்படி அசுத்தம் வளர்ச்சியடைகிறது என்பதையும், இப்படிப்பட்ட வேரை வளர அனுமதிப்பதால் தீமையான பலன் என்ன என்பதையும் அவர் குறிப்பிடுவதாக தெரிகிறது. கசப்புத்தன்மை சுத்தமான தண்ணீருக்கு அல்ல, உப்புத் தண்ணீருக்கு, காரத்தன்மையுள்ள, சுவையற்ற தண்ணீருக்கு ஒப்பிடப்படுகிறது. நமது வசனத்தில் முதலாவது இருதய நிலைமையை குறிப்பிடுவதாக தெரிகிறது. ஆகையால் நீரூற்று மாசடைந்தால், அல்லது அசுத்தமடைந்தால் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் கிரியைகள் அசுத்தமாயிருக்கும், உப்பாயிருக்கும்.

நமது இருதயத்தை கவனிக்க வேண்டும் என்ற கருத்து தெரிகிறது. பெருந்தன்மையற்ற உணர்வை பெறுவது அல்ல. அப்படி அது ஊடுருவினால், தொற்றும் தன்மை கொண்ட எதையும் நாம் எதிர்ப்பது போல, அது உடனே எதிர்க்கப்பட வேண்டும். ஒருவரிடத்தில் கோபத்தை மாத்திரமல்ல, குறைகூறும் மனோபாவத்தையும் அல்லது ஒருவரது செயலில் குற்றம் காணுதலையும் ஆவியின் கசப்பு ஒவ்வொன்றையும் நாம் எதிர்க்க வேண்டும். இந்த இடத்தில் நமது இருதயத்தைக் கவனிக்க வேண்டும். கசப்பின் ஆவிக்கு இடம் கிடைத்தவுடனேயே அந்த நபரின் அனைத்து தவறுகளும் மிகைப்படுத்தப் பட்டு எல்லா நல்ல குணங்களும் மறக்கப்படும். அதன்பிறகு கோப உணர்வும் எதிர்க்கும் ஒரு கசப்பான ஆவியும் வரும். கோபத்தின் உணர்வை நீடித்து உடனே அந்த தனிப்பட்ட நபரை வெறுப்பதற்கு வழி நடத்தும்.

அந்த நபர் கோபத்தை மட்டும் உணராமல், வெறுப்பதற்கான உணர்வை வளர்க்கும். **[R4760 : page 45]** ஒரு கசப்பு உணர்வை வளர்க்கும். அது அதிக தீங்கு விளைவிக்கக் கூடியதாக அபிவிருத்தி அடையும். அடுத்து அந்த நபரைப் பற்றி தீமையாக பேசக்கூடிய மனநிலை வரும். இயற்கையாகவே ஜனங்கள் வெறுக்கிறவர்களை நேசிக்க மாட்டார்கள். அதன்பிறகு பொறாமை, ஒரு வெறுப்பு உணர்வு வருகிறது. தீமையான மொழிகளை பேசக்கூடிய விருப்பம் மாத்திரம் அல்ல, காயப்படுத்துவதற்கான விருப்பத்தையும் அடைந்த, அவர்களுக்கு சில காயம் ஏற்பட்டால் அதனால் சந்தோஷத்தை உணரும் நிலைமையும் வருகிறது. இப்படியாக தீமை செல்கிறது.

### வேதவாக்கியங்கள் ஒரு கண்ணாடி

ஒரு சீர்த்திருத்தலுக்கு நம்மைப் பற்றிய ஒரு சரியான பார்வை மிகவும் அவசியமாக இருக்கிறது. நாம் பலமின்றி இருப்பதை நம்மை நாமே பார்க்கும் வரை, தேவனுடைய

குமாரனுடைய புண்ணியத்தினால் நம்மை ஒப்புரவாக்க நம்மை அவரிடம் இழுக்கும். அவரது மகா கிருபையை நாம் உணரவில்லை. வேத வாக்கியங்கள் தான் கண்ணாடி. நாம் ஒவ்வொரு நாளும் கண்ணாடிக்குள் பார்த்து, நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை காண்பது சரியானதாக இருக்கும். "எங்களுக்கு எதிராக பாவம் செய்தவர்களை நாங்கள் மன்னிக்கிறதைப் போல எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்" என்பது நமது கர்த்தரின் ஜெபம்.

நாம் சரியான மனோபாவத்தில் இருக்க வேண்டும். மிகவும் பெரிதான யோசனை என்னவென்றால், நான் யாருக்கு விரோதமாக அத்துமீறி இருக்கிறேனா அல்லது யாராவது எனக்கு விரோதமாக அத்துமீறி இருக்கிறார்களா, இதற்கு போதுமானதை செய்ய வேண்டும். மன்னியாதிருக்க காண்போமானால் அந்த மனோபாவத்தை நாம் நீக்க வேண்டும், வேரறுக்க வேண்டும். நீக்கப்பட வேண்டியது கசப்புத்தன்மையின் வேர் மாத்திரமல்ல, அப்படிப்பட்ட உணர்வின் ஆரம்பம் அறிகுறிதோன்றும் போதே கவனித்து நீக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு இருதய நிலைமைக்குள் வந்திருக்கிறதை யாராவது ஒருவர் கண்டால், இதைக் குறித்த தேவனுடைய பார்வை என்னவாக இருக்கும் என்பதை அவர் நினைத்து பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட மனோபாவத்தை உடையவர்களிடம் தேவன் அன்பு செலுத்துவது எவ்வளவு இயலாததாக இருக்கும்! தேவனை உண்மையிலேயே நேசிக்கிற யாரும், தேவனுடைய வார்த்தையாகிய பார்க்கிற கண்ணாடி மூலம் கிடைக்கிற சித்திரத்தின் மூலம் அதிர்ச்சி அடைவார். அவர் உடனே தவறு செய்தவரிடம் சென்று மன்னிப்பு கேட்பார். தவறு கோபத்தினாலோ அல்லது கெட்ட பேச்சினாலோ வந்திருந்தால் இது மேற்கொள்ளப்பட வேண்டும், நீக்கப்பட வேண்டும். காரியம் இந்த அளவுக்கு சென்றிருந்தால், அதை யாரும் அறியாதிருந்தால் இதுவே முடிவாக இருக்கும்.

கோபமும் கசப்பும் ஒழுங்குக்கு முற்றிலும் அப்பாற்பட்டது. ஆகையால் மாம்சமானது ஏதாவது ஒருவழியில் தாழ்மைப்படுத்தப்பட வேண்டும். உதாரணத்திற்கு, ஒருவர் இன்னொருவருக்கு விரோதமாக கசப்பாக நடந்து கொண்டால், பிந்தியவரிடம் அவர் உங்களைக் குறித்து கசப்பாக நினைத்திருந்தார், நீங்கள் தேவனிடம் விட்டு விடுங்கள் என்று சொல்ல வேண்டும். சிலர் தங்களை நீதியில் திருத்தப்பட ஒப்புக்கொடுக்காமல் தவறு செய்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். "நல்லது, நான் இதை நிறுத்திவிடுவேன், மறுபடியும் இதைச்செய்ய மாட்டேன்" என்று அவர்கள் கூறலாம். அது செய்யப்படும் போது, மாம்சமானது வளர்க்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டது என்று நாங்கள் கருதுகிறோம். தங்களைத் தொடர்ந்து கவனித்து, நிதானித்தால் அவர்களுக்கு ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் வருகிறது. அப்போஸ்தலர் கூறுவது போல, "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்." (1 கொரிந்தியர் 11:31)

இந்த காரியத்தைக் குறித்து ஒரு கதை நமது நினைவுக்கு வருகிறது. ஒரு மனிதன் காலையில் வண்டியில் சென்று கொண்டிருந்தான். அவன் சாலை ஓரத்தில் ஒரு பிச்சைக்காரனைப் பார்த்து, "இந்த மனிதனுக்கு இருபத்தி ஐந்து செண்ட் கொடுப்பேன். ஏனெனில் இது கிறிஸ்துமஸ் காலை" என்று கூறினான். மறுபடியும் அவன் "நான் கொடுக்கமாட்டேன், ஒரு பென்னிதான் கொடுப்பேன்" என்று எண்ணினான். அவன் எப்படி இருந்தான் என்பதை நினைத்துப் பார்த்த போது இந்த எண்ணம் வந்தது. கால் டாலர் கொடுக்கலாம் என்று நினைத்த போது அவனது பெருந்தன்மையான எண்ணத்தை அனுமதித்திருந்தான். பிறகு அவன் தனக்குத்தானே கூறிக்கொண்டதாவது: "நான்கு மடங்காக அவனுக்கு ஒரு டாலர் கொடுக்கலாம்."ஆகையால் அவன் ஒரு டாலரைக் கொடுத்தான். எழுபத்தைந்து செண்ட் அதிகப்படியாக அவனைவிட்டு சென்றது.

இதே கொள்கையை அல்லது விளக்கத்தைப் பயன்படுத்தி, தங்களை தாங்களே நிதானிக்க வேண்டும் என்று கர்த்தருடைய ஜனங்களுக்கு மிகவும் அறிவுறுத்தப்பட வேண்டியது என்று நாங்கள் நம்புகிறோம். நமது கத்தோலிக்க நண்பர்கள் சொல்லுவது போல அல்ல, அவர்கள் கூறுவதாவது: "நீ போய் மணிக்கணக்காக ஜெபி" அல்லது "துன்பம் தருகிற ஆடையை அணிந்து கொள்," அல்லது "உன் முதுகை சாட்டையால் ஒரு அடி அடித்துக்கொள்." நாம் பகுத்தறிவுக்கு இசைவாக நிதானிப்பது மிகவும் ஞானமாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட வகையான நோன்பு ஏற்புடைய கனிகளை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.

------------------------